සියලු ම හිමිකම් ඇවිරිණි
All Rights Reserved]

சபரகமுவ பළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
Sabaragamuwa Provincial Department of Education

| | |
|---|---|
| வாராந்த பாடசாலை - 2021 | தரம் - 08 |
| සති පාසල - 2021 | 08 ශ්‍රේණිය |
| Weekly school - 2021 | Grade - 08 |

புவியியல்
භූගෝල විද්‍යාව
Geography


வாரம் - 05

தயாரிப்பு: எம்பிலிபிடிய கல்வி வலயம்
ஆசிரியர்: M.தினேஸ் BA,PGDE®
இ/எம்பி/ மாதம்பை இல:02 தமிழ் வித்தியாலயம்
இறக்குவானை

**அலகு : 02. உயிரினங்களின் வாழிடமாக புவியின் தனித்துவம்**

- **மாணவர்கள் புத்தகத்தின் 23 ஆம் பக்கம் தொடக்கம் 24 ஆம் பக்கம் வரை பார்க்கவும்.**
- **நியம நேரத்தை கற்பதற்கான வழிகாட்டி செயலட்டை கணித செயன்முறைகளை கவனத்தில் கொள்க.**
- **பின்வரும் செயன்முறையை கடந்த 4 ஆம் வார செயலட்டையுடன் தொடர்ச்சியாக அவதானிக்க.**

- கிறீன்விச் கோட்டிற்கு கிழக்கே உள்ள நெட்டாங்குகள் கிழக்கு நெட்டாங்குகள் எனவும் மேற்கே உள்ள நெட்டாங்குகள் மேற்கு நெட்டாங்குகள் எனவும் அழைக்கப்படும்.
- கிழக்கு நெட்டாங்குகளுக்கு சூரியன் முதலில் உச்சம் கொடுப்பதால் நேரம் கூடுதலாக இருக்கும்.
- $15^0$ நெட்டாங்குகளுக்கு ஒரு தடவை ஒரு மணித்தியாலம் என்ற அளவில் வேறுபடும்.
  ( இதற்கேற்ப கிறீன்விச் நேரம் பகல் 12.00 மணி ஆகும் போது $15^0$ கிழக்கு நெட்டாங்கில் நேரம் பிற்பகல் 1.00 மணியாகும். மாறாக மேற்கு நெட்டாங்கு $15^0$ இல் நேரம் முற்பகல் 11.00 மணியாகும்.)




* **கிறீன்விச் நெட்டாங்கிலிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும்போது நேரம் கூடும். கிறீன்விச் நெடுங்கோட்டிலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும்போது நேரம் குறைவடையும்.**

**செயற்பாடு - 02**

**கிறீன்விச் கோட்டில் பி.ப. 2.00 மணியாக இருக்கும் போது மேற்கு கிழக்கு நெட்டாங்குகளின் நேரத்தைக் மேற்கண்ட உதாரணத்தின் படி கணிக்க.**

**1. $15^0$ 2. $30^0$ 3. $45^0$ 4. $60^0$ 5. $75^0$**

**6. $90^0$ 7. $105^0$ 8. $120^0$ 9. $135^0$ 10. $150^0$ 11. $165^0$**

**இப்பாகைகளை கிழக்குநெட்டாங்கு மேற்கு நெட்டாங்கு என நேரத்தை கணித்துக் கூறுக.**

**இச்செயலட்டைகளை தொடர்ச்சியாக கற்கவும் இச்செயலட்டையினை செய்வதற்கு முன்னர் கடந்த வார செயலட்டையினை மீண்டும் அவதானிக்கவும்.**

**“ தலைகுனிந்து கற்கும் கல்வி தலை நிமிர்ந்து வாழச் செய்யும் ”**
**என்றும் உங்கள் ஆசான் : M.தினேஷ்.**